**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் - 2018**

---

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2017 யூன் 29 தொடக்கம் 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான (பதினெட்டு மாத காலப்பகுதிக்கான) நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 0486-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் லங்கா எலெக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளன. மேல் மாகாணத்திலுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையொன்றை நிர்மாணிப்பதனூடாக கலப்பின புதுப்பிக்கத்தக்க சக்தி முறைமைகளை ஸ்தாபிப்பதற்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையை ஸ்தாபித்தல் எனும் பெயரிலான கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 268.36 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.8 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றுக்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 13 இலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதிலுள்ள தாமதம் காரணமாக நன்கொடை தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாமல் இருக்கலாம். | இது ஒரு புதிய செயற்திட்டமாக உள்ளதுடன் செயற்திட்டம் தொடர்பான கணக்கீடு மற்றும் நிர்வாக வேலையை நெறிப்படுத்தும் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. வழங்கப்பட்ட பதவியணியை ஒதுக்கீடு செய்வதற்கான நிலையில் நாங்கள் இருக்கவில்லை. பின்னர் 2019 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களுக்கான சபை அங்கீகாரத்தை பெற முடியாதிருந்தது. | உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் தேவைப்பாடு சுற்றறிக்கையுடன் இணங்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| **கூறு** | **செயற்பாடு** | **2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | **தாமதம்** | **விளைவுகள்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்** | **அடையப்பட்ட செயலாற்றல்** | | | | |
| புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மினசார விநியோக முறைமையை ஸ்தாபித்தல் | புதுப்பிக்கத்தக்க சக்தி மின்சார விநியோக ஆரம்பச் செயற்திட்டத்திற்கான விலைமனுக்கள்/ கூறுவிலைகளைக் கோருதல் | செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் காலாண்டு I – 2018 இல் பட்டியல் வழங்கப்பட வேண்டும். | 2018 நவம்பர் 07 இல் அமுல்ப்படுத்தப்பட்டது. (காலாண்டு – 04) | 07 மாதங்கள் | பெறுகை நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதில் உள்ள சாத்தியமான தாமதங்கள் | Q4–2016 இல் மதியுரையாளரின் ஆட்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அடிப்படை வடிவமைப்பு வேலைகளுக்காக முன்னதாக Q1–2017 அளவில் மதியுரையாளர்களை வேலையில் ஈடுபடுத்துவதற்கு எல்ஈசீஓ தயாராக இருந்தது. கடன் செயற்திறனை வெளிப்படுத்துதல் தாமதமாகி இருந்ததுடன் பிரதான செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் காரணமாக Q3–2017 | செயற்திட்ட நிர்வாகக் கைநூல்/ செயற்திட்ட திட்டத்திற்கிணங்க வேலைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | இலேயே செயற்பாட்டிற்கு வந்திருந்தது. செயற்திட்ட எண்ணக்கருவின் புதுமை காரணமாக வடிவமைத்தல் கட்டம் எதிர்பார்க்கப்பட்டதை விட சில காலம் எடுத்திருந்தது. | |
| ஒப்பந்தத்தை வழங்குதல் | Q4–2018 இல் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. | 2020 பெப்ரவரி 11 இல் வழங்கப்பட்டது. | 13 மாதங்கள் | செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதில் உள்ள சாத்தியமான தாமதங்கள் | கேள்வி சமர்ப்பித்தல் கால எல்லையை மூன்று தடவைகளாக நீடித்தமை, மதிப்பீட்டு காலப்பகுதியை நீடித்தமை மற்றும் பெறுகைக் குழு உறுப்பினர்கள் காணப்படாதமை என்பன தாமதத்திற்கு பங்களித்த காரணியொன்றாக உள்ளதுடன் காலாண்டு –2020 இலேயே ஒப்பந்தம் வழங்கப்பட முடிந்திருந்தது. | செயற்திட்ட நிர்வாகக் கைநூல்/ செயற்திட்ட திட்டத்திற்கிணங்க வேலைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டக் காலப்பகுதிக்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல் தாமதமாகியுள்ளது. | தனியான ஆயத்த தயாரிப்பு ஒப்பந்ததாரர் முழுமையான வடிவம், பெறுகை மற்றும் நிறுவுதலை மேற்கொள்கின்றதுடன் ஆரம்ப மற்றும் இடைக்கால வேலைத்திட்டம் மற்றும் செயற்திட்டத்திற்கான பணவளிப்பு பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு ஏடிபீ இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தாமதங்கள் காரணமாக அதற்கிணங்க அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு செய்யப்பட்ட திட்டம் மற்றும் பணவளிப்பு பட்டியல் என்பன 2020 யூன் 17 இல் ஏடிபீ இற்கு சமர்பிக்கப்படடிருந்தன. தற்பொழுது ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2021 யூன் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட வேலைத் திட்டம் பின்பற்றப்பட வேண்டும். |